இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 07 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 31 – வெள்ளிக்கிழமை 16 ஆகஸ்டு 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 07 : Thiruvalluvar Year - 2055 - Aadi 31 - Friday 16 August 2024 - Dak 12 Pages ₹ 5.00

ஏழை எளியோருக்கு உதவிட புதிய திட்டம்

“முதல்வர் மருந்தகங்கள்” - 1000 : பொங்கல் அன்று தொடக்கம் !

78 - வது சுதந்திர தின விழா : சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அடுக்கடுக்கான அறிவிப்புகள் !

சென்னை, ஆக. 16-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2024) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் விழாப் பேருரையில், ஏழை, எளிய மக்களுக்கு உதவிட புதிய திட்டமாக “முதல்வர் மருந்தகங்கள்” - 1000 முதல் கட்டமாக தொடங்கப்படும் என அறிவித்தார்.

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

★தாயின் மணிக்கொடி பாரீர்! அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

என்ற தேசியக்கவி பாரதியின் பாடல் வரிகளைப் பாடும் தகுதியை நமக்குத் தந்த இந்திய நாட்டு விடுதலை வீரர்கள் அத்தனை பேரையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளைப் போற்றுவோம்!

விடுதலையைப் பாடுபட்டுப் பெற்றுக் கொடுத்த தியாகிகளைப் போற்றுவோம். அவர்களின் குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவிப்போம். எந்த நோக்கத்துக்காக அவர்கள் போராடினார்களோ, அந்த நோக்கம் நிறைவேற எந்நாளும் உழைப்போம் என்று இந்நாளில் உறுதி ஏற்போம்.

இந்த விடுதலை எளிதாகக் கிடைத்த விடுதலை அல்ல. முந்நூறு ஆண்டு காலப் போராட்டத்துக்குப் பின்பு கிடைத்த சுதந்திரம் இது. இரத்தத்தையே வியர்வையாகத் தந்து, தங்கள் உடலையே விடுதலை உலைக்களத்துக்கு உணவாகத் தந்த எண்ணற்ற தியாகிகள் நம் இந்திய மண்ணில் உண்டு. அதிலும், குறிப்பாக தமிழ்நாட்டில் அதிகம் உண்டு. இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி, வெளிநாடுகளின் உதவியையும் பெற்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் படை நடத்தியபோது, கரம் கோர்த்தவர்கள் தமிழ்நாட்டு வீரர்கள். விடுதலையை அடைய கால நிர்ணயம் இல்லை என்று தெரிந்தும், உயிரையே ஈந்த மாவீரர்கள் வாழ்ந்த மண், இந்தத் தமிழ் மண். அறவழியில், எதிரியைப் பணிய வைத்த அண்ணல் காந்தியடிகளின் பின்னால் முழு மனதோடு இந்தியா அணிவகுத்தது. அதிலும் தமிழ்நாடு முழுமையாகக் கை கோர்த்து நின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2024) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

சத்தியப் பாதையில் அணிவகுத்தவர்கள் தமிழ்நாட்டுத் தியாகிகள்!

“கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்”

என்று நாமக்கல் கவிஞர் பாடிய பாடல் வரிகளுக்கு ஏற்ப சத்தியப் பாதையில் எத்தனை சோதனைகள் வந்தாலும், அணிவகுத்தவர்கள் தமிழ்நாட்டுத் தியாகிகள். இவர்களின் தியாகத்தால்தான், 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் விடுதலைக் காற்றைச் சுவாசித்தோம். ’நமக்கான நாடு நமதே’ என்பதை உணர்ந்தோம். நினைத்துப் பாருங்கள், 77 ஆண்டுகளைக் கடந்து விட்டது விடுதலை இந்தியா. தியாகிகளின் கனவான அனைவருக்குமான இந்தியாவை நாம் உருவாக்கி வளர்த்து வருகிறோம். வேற்றுமையில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒருங்கிணைந்த வளர்ச்சி இவற்றின் ஒன்று பட்ட வலிமையே நாட்டின் வல்லமையாக உலகுக்குக் காட்டி வருகிறோம். ஒரு வண்ணமல்ல நமது கொடி, அது மூவண்ணக் கொடி! நமது பன்முகத்தன்மையின் அடையாளம் இந்தக் கொடி!

விடுதலை நாள் என்பது, அரசியல் விடுதலை நாளாக மட்டுமல்லாமல், பண்பாட்டு விழாவாக ஒட்டுமொத்த இந்திய மக்களால் கொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட் 15 என்பது ஆனந்த சுதந்திரம் அடைந்த நாள் மட்டுமல்ல, ஆனந்தமான இந்தியாவை அடுத்தடுத்த ஆண்டுகளில் உருவாக்கத் திட்டமிடும் நாளாகவும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் திருநாளின் வெற்றிச் சின்னமாக விளங்கும் நம் தேசியக் கொடியை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக முகப்பில், ஓங்கி உயர்ந்து நிற்கும் கம்பத்தில் ஏற்றி வைத்துப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுள்ளோம். விடுதலை நாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையை 50 ஆண்டுகளுக்கு முன்னால், முதன் முதலில் 1974ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர், நம் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற வீற்றிருக்கும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்!

தமிழ்நாட்டு மக்களுக்கு என்றென்றும் நன்றிக்குரியவன்!

இதுவும் ஒரு விடுதலைப் போராட்டம்தான்! மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வேண்டும் என்பதற்கான போராட்டம்! முத்தமிழறிஞர் கலைஞர் அன்று பெற்றுத்தந்த உரிமையின்படி, அவரது நூற்றாண்டு நிறைவு விழா ஆண்டில், இன்று நானும், நான்காவது ஆண்டாக சென்னை கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றும் வாய்ப்பைப் பெற்றமைக்காகப் பெருமை அடைகிறேன். இந்த அருமையான வாய்ப்பை தமிழ்நாட்டின் முதலமைச்சராகக் கொடியேற்றும் வாய்ப்பை எனக்குத் தந்த எனதருமைத் தமிழ்நாட்டு மக்களுக்கு என்றென்றும் நன்றிக்குரியவன் ஆவேன்.

நம் நாட்டில் விடுதலைக்காக 300 ஆண்டுகளாய் நிகழ்ந்த நெடிய போராட்டங்களில் இன்னுயிர்களை ஈந்தும், உடல் உறுப்புகளை இழந்தும், சொத்து சுகங்கள், மனைவி மக்கள் அனைத்தையும் பறிகொடுத்தும், நம் நாட்டின் விடுதலையை நமக்குப் பெற்றுத் தந்த வீரதீரத் தியாக வேங்கைகள் அனைவருக்கும் நம்முடைய நன்றிகளைத் தெரிவிக்கும் அடையாளமாக வீர வணக்கம் செலுத்தி டுவோம்! இன்று மட்டுமல்ல; என்றைக்கும்அந்தவீரத்தியாகிகளைநினைவுகூரும் வகையில் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

கலைஞர் பெற்றுத் தந்த உரிமை!

இந்தத் திருநாளின் வெற்றிச் சின்னமாக விளங்கும் நம் தேசியக் கொடியை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக முகப்பில், ஓங்கி உயர்ந்து நிற்கும் கம்பத்தில் ஏற்றி வைத்துப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுள்ளோம். விடுதலை நாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையை 50 ஆண்டுகளுக்கு முன்னால், முதன்முதலில் 1974ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர், நம் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற வீற்றிருக்கும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்!

2024 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு

15 காவல் துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்கள் !

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, ஆக.16-

புலன் விசாரணைப் பணியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ் கண்ட 10 காவல்துறை அதிகாரிகள் 2024ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்கப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

திருமதி.கி.புனிதா, காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், வேலூர் மாவட்டம்

து. வினோத்குமார், காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் பிரிவு, மத்திய குற்றப்பிரிவு, சென்னை.

செல்வி.ச.சௌமியா, காவல் துணை கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கடலூர் மாவட்டம்.

திருமதி.ஐ.சொர்ணவள்ளி, காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், திருப்பூர் மாநகரம்.

திருமதி. நா. பார்வதி, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

திருமதி.பெ.ராதா, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, திருப்பூர்.

செ.புகழேந்தி கணேஷ், காவல் துணை கண்காணிப்பாளர், செங்கல்பட்டு உட்கோட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

திருமதி. இரா.தெய்வராணி, காவல் ஆய்வாளர், பெருந்துறை காவல் வட்டம், ஈரோடு மாவட்டம்.

திருமதி. ஆ. அன்பரசி, காவல் ஆய்வாளர், பொன்னை காவல் நிலையம், வேலூர் மாவட்டம்.

நா.சுரேஷ், துணை காவல் கண்காணிப்பாளர், ஊரக உட்கோட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

இதேபோன்று பொதுமக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்கண்ட 5 காவல்துறை அதிகாரிகளுக்கு 2024ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்படும்:

தா.ச. அன்பு.
காவல்துறை தலைவர்,
குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை, சென்னை.

இ.கார்த்திக்,
காவல் கண்காணிப்பாளர் I,
தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை, சென்னை.

சி.ர.பூபதிராஜன்,
துணைக் காவல் கண்காணிப் பாளர்,
தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, சேலம் சரகம்.

க.சீனிவாசன்,
காவல் ஆய்வாளர் (தொ.நு.),
காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை.

பு.வ. முபைதுல்லாஹ்,
காவல் உதவி ஆய்வாளர்,
உள்வட்ட பாதுகாப்பு பிரிவு, அயல்பணி திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவு, தலைமையகம், சென்னை.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப்பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.